2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 141, மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

141—

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம்

***5481—திரு. பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு ஆலங்குளம் வட்டம், குத்தப்பாஞ்சன் கிராமத்தில், புல எண் 209/5–ல் சுமார் 25 சென்ட் பரப்பளவுள்ள அரசுக்குச் சொந்தமான நிலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலம் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செயல்முறை ஆணையின்படி, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்குப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், ஆலங்குளத்திலுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்ட தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2023 ஏப்ரல் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பேரவையில் இருக்கக்கூடிய Screen-ல் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முதல் கேள்வியை முதன்முதலாகத் தற்போது, (மேசையைத் தட்டும் ஒலி) கண்டுகளித்தீர்கள். இதுபோல் தொடர்ந்து மற்ற அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கும் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குக் கட்டடம் கட்டித் தரப்படும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அருகில் இருக்கின்ற கீழப்பாவூர் ஆண்டிப்பட்டி என்ற கிராமத்தில் பிரதான ஆலங்குளம் தென்காசி சாலையில்கூட இடம் தெரிவு செய்யப்பட்டு, அது இன்னும் சிறப்பான இடமாக அமைந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆலங்குளம் அரசு மருத்துவமனைக்கு ரூ.10 கோடி கடந்த ஆண்டு ஒதுக்கி தந்ததுபோல இந்தத் தீயணைப்பு நிலையத்திற்கும், இந்தாண்டு நிதி ஒதுக்கி, அந்த இடத்தில் ஆலங்குளம் மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆலங்குளம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான இடங்களைக் குறிப்பிட்டு, அங்கே கட்டடம் கட்டப்படுமா என்று வினாவினை எழுப்பியுள்ளார்.

ஏற்கெனவே ஆலங்குளம் வட்டம், குத்தப்பாஞ்சன் கிராமத்தில், அரசுக்குச் சொந்தமான நிலம் தெரிவு செய்யப்பட்டு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்குப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தினரிடமிருந்து 3 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீடு

2023 ஏப்ரல் 12]

தயாரிக்கப்பட்டு, அங்கே தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.*

திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியத்தில், கிட்டத்தட்ட 23 கிராம பஞ்சாயத்துகளும், 167 கிராமங்களும் உள்ளன. 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, சுமார் 1,00,324 மக்கள் அங்கே வசித்து வருகின்றனர். அருகில் மேற்குத் தொடர்ச்சி மலை அமைந்துள்ளது. அவசரக் காலங்களில் காட்டுத் தீ ஏற்பட்டாலோ, வன விலங்குகளால் ஆபத்து ஏற்பட்டாலோ அல்லது தீ விபத்துகள் ஏற்பட்டாலோ, தீயணைப்பு வாகனங்கள் 20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தென்காசி அல்லது ஆலங்குளத்திலிருந்துதான் கடையம் ஒன்றியத்திற்கு வரவழைக்கக்கூடிய சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டு கடையம் பகுதிக்கு இந்து சமய அறநிலையத் துறை மூலமாக ஒரு கல்லூரியை அமைத்துத் தந்திருக்கின்றார்கள். அதேபோன்று, கடையம் பகுதிக்கு நீண்ட நாள் கோரிக்கையான, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் கட்டடமும், மீட்புப் பணிகள் அலுவலர் குடியிருப்பும் கட்டுவதற்குப் பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீ விபத்துகள் ஏற்படும் இடங்களுக்கு, தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர் குறைவான நேரத்திற்குள் விரைந்து வந்து மீட்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ள நம்முடைய அரசு, அறிவியல்பூர்வமாக, உலகளாவிய நிலைப்படுத்துதல் அமைப்பு (GPS) வரைபடங்களின் உதவியுடன் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் அமைவிடங்களைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளைக் கொள்கை அளவில் மேற்கொண்டு வருகிறது.*

பொதுவாக, ஓரிடத்தில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் தொடங்குவதற்கு சில வரையறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அது 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் வேறு ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் இருந்தால், அது தவிர்க்கப்பட வேண்டும் என்ற அளவுகோல் இருக்கக்கூடிய நிலையில், மாண்புமிகு உறுப்பினர் கோரும் கடையம் பகுதியைப் பொறுத்தவரையில், 18 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அம்பாசமுத்திரத்திலும், 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தென்காசியிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் முழு அளவில் பணியாளர்களைக் கொண்டு சிறப்பாகத் தற்போது செயல்பட்டு வருகின்றன.

மேலும், உறுப்பினர் குறிப்பிடும் கடையம் பகுதியில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம் 59 சிறிய அளவிலான தீ விபத்துகள்தான் நிகழ்ந்துள்ளன. எனவே, கடையம் பகுதியில் தீ விபத்து ஏதேனும் நிகழ்ந்தால், அம்பாசமுத்திரம் மற்றும் தென்காசி பகுதிகளில் இயங்கிவரும் தீயணைப்பு நிலையங்களைச் சார்ந்த பணியாளர்கள் மற்றும் தீயணைப்பு ஊர்திகளைக் கொண்டே மீட்புப் பணிகளை மேற்கொள்ள இயலும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

142—

சிமெண்ட் கால்வாய்

***51740— திரு. பி. அய்யப்பன்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி 58 கிராம கால்வாயை சிமெண்ட் கால்வாயாகக் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?